பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி - சென்னை - 4
13.08.2025 6.45
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இளையோரிடம் அறிவியல் மற்றும் விண்வெளி ஆர்வத்தை வளர்ப்பதில் இந்தியா அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. வனவிலங்குகள் மற்றும் வன வளங்களைப் பாதுகாக்க மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக வனத்துறை இணையமைச்சர் திரு. கீர்த்திவர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் மின்சார பேருந்துகளின் இயக்கம் மாநிலம் முழுவதும் படிப்படியாக விரிவுபடுத்தப்படும் என்று போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சிவசங்கர் கூறியுள்ளார்.

4. அத்திக்கடவு - அவினாசி திட்டத்தை தமிழக அரசு முறையாக செயல்படுத்த வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

5. உலக விளையாட்டுப் போட்டிகளில் ஊஷூ பிரிவில் இந்தியாவின் நர்மதா பத்ரா வெள்ளிப் பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

*இளையோரிடம் அறிவியல் மற்றும் விண்வெளி ஆர்வத்தை வளர்ப்பதில் இந்தியா அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

*சர்வதேச வானியல் மற்றும் வான் இயற்பியல் தொடர்பான நிகழ்வில் காணொலிக் காட்சி மூலம் நேற்று அவர் உரையாற்றினார்.*

*விண்வெளித் துறையில் இந்தியா புதிய சாதனைகளை நிகழ்த்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.*

*சந்திரயான்-3, ஆதித்யா எல்-1, சுபான்ஷு சுக்லாவின் விண்வெளிப் பயணம் உள்ளிட்டவற்றை சுட்டிக்காட்டிய அவர், இவை ஒட்டுமொத்த இந்தியர்களுக்கும் உத்வேகம் அளிப்பதாக கூறினார்.*

*மாணவர்களிடையே அறிவியல் ஆர்வத்தை வளர்ப்பதற்கான அடல் டிங்கரிங் ஆய்வகங்கள் மூலம் ஒரு கோடிக்கும் அதிகமான மாணவர்கள் பயனடைவதாக அவர் தெரிவித்தார்.*

*அறிவியல் மற்றும் விண்வெளி ஆய்வுகளில் சர்வதேச ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியா விரும்புவதாக அவர் கூறினார்.*

*விண்வெளி அறிவியலின் மூலம் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டு செயல்பட வேண்டியது அவசியம் என்று திரு. நரேந்திர மோடி வலியுறுத்தினார்.*

<<<<>>>>

*வனவிலங்குகள் மற்றும் வன வளங்களைப் பாதுகாக்க மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக வனத்துறை இணையமைச்சர் திரு. கீர்த்திவர்தன் சிங் தெரிவித்துள்ளார்.*

*கோவையில் நடைபெற்ற சர்வதேச யானைகள் தினம் தொடர்பான நிகழ்ச்சியில் பேசிய அவர், ஆசிய காட்டு யானைகளில் 60 சதவீதம் இந்தியாவில் உள்ளதாகக் கூறினார்.*

*யானைகளைப் பாதுகாப்பதன் மூலம் காடுகளையும், சுற்றுச்சூழலையும் பாதுகாத்து பல்லுயிர்ப் பெருக்கத்தை அதிகரிக்க முடியும் என்று அவர் கூறினார்.*

வன விலங்குகளின் எண்ணிக்கையைப் பொறுத்து மாநிலங்களுக்கு மத்திய அரசு நிதி ஒதுக்கி வருவதாகவும், தேவைப்படும் பட்சத்தில் கூடுதல் நிதி ஒதுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ரயில் தண்டவாளங்களில் யானைகள் விபத்தில் சிக்குவதைத் தவிர்க்க தமிழகத்தில் செயல்படுத்தப்படும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் பிற மாநிலங்களிலும் செயல்படுத்தப்படும் என்று திரு. கீர்த்திவர்தன் சிங் கூறினார்.

சிறப்பாக செயல்பட்ட மத்திய மற்றும் மாநில வனத்துறை பணியாளர்களுக்கு இந்த நிகழ்ச்சியின்போது அமைச்சர் விருதுகளை வழங்கினார்.

<<<<>>>>

தமிழகத்தில் வேளாண் உள்கட்டமைப்பு நிதியத்தின்கீழ் 8 ஆயிரம் திட்டப் பணிகளுக்கு 2 ஆயிரத்து 700 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளதாக மத்திய வேளாண்துறை இணையமைச்சர் திரு. ராம்நாத் தாக்கூர் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இது தொடர்பான கேள்விகளுக்கு பதிலளித்த அவர், அறுவடைக்கு பிந்தைய உள்கட்டமைப்பை மேம்படுத்த 224 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

பாரம்பரிய விவசாயத்தை ஊக்குவிக்கும் திட்டத்தால் தமிழகத்தில் 38 ஆயிரம் விவசாயிகள் பயனடைந்துள்ளதாக திரு. ராம்நாத் தாக்கூர் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வியியல் கல்லூரிகளில் நடப்பு நிதியாண்டுக்கான பி.எட். மாணவர் சேர்க்கைக்கான ஆணைகளை இன்று முதல் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என்று மாநில் அரசு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே இணையவழியில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு கலந்தாய்வு நடைபெற்றுள்ளதாக மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி. செழியன் கூறியுள்ளார்.

*மாணவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கல்லூரிகளில் இணையுமாறு கூறியுள்ள அவர், வகுப்புகள் வரும் 20ஆம் தேதி முதல் தொடங்கும் என்று தெரிவித்துள்ளார்.*

<<<<>>>>

*தமிழகத்தில் மின்சார பேருந்துகளின் இயக்கம் மாநிலம் முழுவதும் படிப்படியாக விரிவுபடுத்தப்படும் என்று போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சிவசங்கர் கூறியுள்ளார்.*

*அரியலூர் மாவட்டம் செந்துறையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மின்சார வாகனங்களுக்கான சார்ஜிங் முனையங்களை அரசு சார்பில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.*

*மின்சார வாகனப் போக்குவரத்தை அதிகரிப்பதன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும் என்று திரு. சிவசங்கர் கூறினார்.*

<<<<>>>>

*அத்திக்கடவு - அவினாசி திட்டத்தை தமிழக அரசு முறையாக செயல்படுத்த வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.*

*சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், தொடர் போராட்டங்களால் பெயரளவுக்கு இத்திட்டத்தை மாநில அரசு செயல்படுத்தியுள்ளதாக கூறியுள்ளார்.*

*இத்திட்டத்தில் விடுபட்டுள்ள ஆயிரத்து 400 குளம், குட்டைகளை இணைப்பதில் மாநில அரசு அக்கறை செலுத்தவில்லை என்று அவர் குறை கூறியுள்ளார்.*

*இனியும் காலம் தாழ்த்தாமல் இத்திட்டத்தை சரிவர செயல்படுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.*

*அவர் வெளியிட்டுள்ள மற்றொரு பதிவில், நாய்க்கடியில் இருந்து மக்களைப் பாதுகாக்க திமுக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.*

*கடந்த 8 மாதங்களில் தமிழகத்தில் 3 லட்சத்து 67 ஆயிரம் பேர் நாய்க்கடியால் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.*

இது அதிர்ச்சியளிப்பதாகவும், ரேபிஸ் பாதிப்பை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

**<<<<>>>>**

தமிழகத்தில் திமுக அரசு மக்கள் நலனில் அக்கறை செலுத்தவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

கிருஷ்ணகிரி, பர்கூர், ஊத்தங்கரை ஆகிய இடங்களில் நேற்றிரவு பிரச்சாரம் மேற்கொண்ட அவர், திமுக ஆட்சிக்கு வந்து 50 மாதங்களாகியும் பயனுள்ள திட்டம் எதையும் செயல்படுத்தவில்லை என்றார்.

தாலிக்கு தங்கம், மகளிருக்கு மானிய விலையில் இருசக்கர வாகனங்கள் திட்டம் போன்றவற்றை திமுக அரசு நிறுத்தியுள்ளதாக அவர் கூறினார்.

மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாகவும், காவலர்களுக்கே பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுவதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

**<<<<>>>>**

தருமபுரி மாவட்டத்தில் போஷன் அபியான் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன்கீழ் 51 அங்கன்வாடி மையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte - Dhandabani - 28 Sec)*

இத்திட்டம் குழந்தைகளுக்கு பெரும் பயனளிப்பதாக ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் திருமதி சுகந்த பிரியா தெரிவித்துள்ளார்.

*(Voice Byte - Sukantha Priya - 20 Sec)*

**<<<<>>>>**

<u>இருவரிச் செய்திகள்</u>

*ரஷ்யாவின் ஓரேன்பெர்க் பகுதியில் உள்ள ஹீலியம் உற்பத்தி ஆலை மீது யுக்ரைன் ட்ரோன் தாக்குதல் நடத்தியுள்ளது.*

-----------

*நாட்டின் ஜவுளி ஏற்றுமதியை 2030-ம் ஆண்டுக்குள் 9 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அத்துறைக்கான மத்திய இணையமைச்சர் திரு. பபித்ரா மார்கெரிட்டா கூறியுள்ளார்.*

-----------

*நாட்டில் நக்ஸல் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் எண்ணிக்கை 2013-ம் ஆண்டில் 126ஆக இருந்தது எனவும், அது தற்போது 18ஆக குறைந்துள்ளதாகவும் மத்திய உள்துறை இணையமைச்சர் திரு நித்யானந்த் ராய் தெரிவித்துள்ளார்.*

-----------

*நெல்லையில் இன்று நடைபெறும் மனோன்மனீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் 32-வது பட்டமளிப்பு விழாவில் தமிழக ஆளுநர் திரு ஆர்என் ரவி பங்கேற்று மாணவ மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கவுள்ளார்.*

-----------

*நாகப்பட்டினம் மாவட்டத்தில் செயல்படும் ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர் காலிப்பணியிடங்களுக்கு தகுதியான நபர்கள் வரும் 18-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் திரு ப.ஆகாஷ் தெரிவித்துள்ளார்.*

-----------

*தூத்துக்குடி மாவட்டத்தில் ஆறாவது புத்தகத் திருவிழா வரும் 22-ம் தேதி முதல் 10 நாட்கள் நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சியர் திரு இளம் பகவத் கூறியுள்ளார்.*

-----------

*தமிழக சட்டமன்ற பேரவை அரசு உறுதிமொழிக் குழுவினர் ராமநாதபுரம் மாவட்டத்தின் பல்வேறு அரசுத் திட்டப் பணிகளை ஆய்வு செய்தனர்.*

-----------

திருவள்ளூர் மாவட்டம் பள்ளிப்பட்டு அருகே பாலத்தின் மீது கார் மோதி ஏற்பட்ட விபத்தில் ஆந்திராவைச் சேர்ந்த 3 பேர் உயிரிழந்தனர்.

-----------

விழுப்புரத்தில் மாவட்ட நிர்வாகம், காவல்துறை மற்றும் உணவுப் பாதுகாப்புத்துறை இணைந்து மேற்கொண்ட சோதனையின்போது 11 கடைகளில் தடை செய்யப்பட்ட போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு அக்கடைகளுக்கு சீல் வைக்கப்பட்டது.

-----------

தருமபுரி மாவட்டம் கடத்தூர் அருகே மத்திய பட்டு வாரியம் சார்பில் புதிய தொழில்நுட்ப முறையில் பட்டு வளர்ப்பு குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

-----------

சுதந்திர தின விழாவையொட்டி நாளையும் நாளை மறுநாளும் சென்னை தலைமைச் செயலகம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் ட்ரோன்கள் பறக்க தடை விதிக்கப்படுவதாக மாநகர காவல்துறை கூறியுள்ளது.

-----------

உலக விளையாட்டுப் போட்டிகளில் ஊஷூ பிரிவில் இந்தியாவின் நர்மதா பத்ரா வெள்ளிப் பதக்கம் வென்றார்.

சீனாவின் செங்டுவில் நடைபெற்ற இப்போட்டியில் 52 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பறினார்.

------------

சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் நடைபெற்ற ஆசிய அலைச்சறுக்குப் போட்டியில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் பதக்கங்களை வழங்கினார்.

<<<<The End>>>>